[1978 மார்ச் 10

இணைப்பு III

[924-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட எண் 502-க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் பணி புரியும் திரு. வி. சொக்கலிங்கம் என்ற தாயகம் திரும்பிய அகதி ஒருவர், 2-8-1977 ஆம் தேதியிட்ட மனு ஒன்றினை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து உள்ளார். இந்த மனுவில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் உள்ளன.

(1) பாரமரிப்புப்படி, குடிசை போட படி வேண்டியும், இலவச வைத்திய வசதி கோரியும்;

(2) அரிசி, கோதுமைக்குப் பங்கீட்டுப் படி;

(3) பயிற்சி காலத்திற்கு ஊதியம்;

(4) காலமுறைப்படி ஊதிய உயர்வு;

(5) வேலையில் உறுதி, நிரந்தர ஊதியம், சீருடை வழங்கல்;

(6) தேசிய விடுமுறை நாட்களில் ஊதியம்.

(7) ஊதியத்துடன் விடுமுறை;

(8) சம்பள சீட்டுக் கொடுத்தல்;

(9) வேலையாட்களின் குழந்தைகளுக்கு இலவச புத்தகம், சீருடை வழங்குதல்;

(10) வீடு கட்ட இடமும், கடன் வசதியும் ஒதுக்குதல்;

மேலே கண்ட கோரிக்கைகளில் கோரிக்கை எண் 3, 4, 6, 8 ஆகியவைகளில் கண்ட கோரிக்கைகளை ஆலை நிர்வாகத்தினர் ஏற்கனவே நிறைவேற்றி உள்ளனர். திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு என ஒதுக்கப்பட்ட அகதிகள் இந்த ஆலையில் 1978 ஆம் ஆண்டில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

1978 மார்ச் 10]

மேலே கோரிக்கை எண் 1, 2-ல் உள்ள வசதிகளை அகதிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக மறுவாழ்க்கை வசதி வழங்கல் துறையினர் நேரடியாக நிறைவேற்றி வருகின்றனர்.

கோரிக்கை எண் 5-ல் அடங்கி உள்ள அகதிகளை நிரந்தர மாக்குவதானது ஆலையினை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் ஏற்படும் காலி இடங்களை நிரப்பும்போது அகதிகளின் தகுதி, ஊதியம் ஆகியவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். நிதி பற்றுக்குறையின் காரணமாக ஆலை எல்லா அகதிகளுக்கும் சீருடை வழங்க இயலாத நிலையில் உள்ளது. இருந்த போதிலும் 2-10-1978 ஆம் தேதிக்கு முன்பு இவர்கள் எல்லோருக்கும் சீருடை வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஊதியத்துடன் விடுமுறை கொடுப்பது சம்பந்தப்பட்ட கோரிக்கை எண். 7 ஆனது தொழிற் சட்டத்தின் வருகின்றது, இத்தகைய விடுமுறைக்கு உரிய இலங்கை அகதிகளுக்கு இந்த விடுமுறை கொடுக்கப்படும். ஆலையின் தற்போதைய நிதி நெருக்கடியின் காரணமாக 9 ஆவது கோரிக்கையான வேலையாட்களின் குழந்தைகளுக்கு இலவச புத்தகம், சீருடை வழங்குதல் ஆகிய சலுகைகளைக் கொடுக்க இயலவில்லை. கோரிக்கை எண். 10 சம்பந்தப்பட்ட மட்டில் அகதிகளுக்கு தற்போது வீட்டடி இடம் கொடுக்கப்பட்டு உள்ளது. மறு வாழ்க்கை வசதி வழங்கல் துறையினர் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் மூலமாக இந்த அகதிகளுக்கு வீடு கட்ட கடன் வழங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மேற்கண்ட கோரிக்கைகள் சம்மந்தமாக 20-8-1977 ஆம தேதியன்று தஞ்சாவூரில் அகதிகள் சங்கத்தினருடன் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.